ஓராண்டில்
அரசின் அரும்பணிகளின் அணிவகுப்பு

சேலம் மாநகராட்சி

“நமக்கு நாமே” திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியில் நடைபெற்ற அரசு விழாவில் நமக்கு நாமே திட்டம் மற்றும் நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம் ஆகிய புதிய திட்டங்களைத் தொடங்கிவைத்தார்.

- சேலம் மாநகராட்சியில், அரசின் பங்களிப்புத் தொகை ரூ.194.04 இலட்சம் மற்றும் பொதுமக்களின் பங்களிப்பு தொகை ரூ.129.39 இலட்சம் என மொத்தம் ரூ.323.43 இலட்சம் மதிப்பீட்டில், நமக்கு நாமே திட்டத்தின்கீழ், சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல், மாநகராட்சிப் பள்ளிகள் புதுப்பித்தல், வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் குடிநீர் பணிகள் என மொத்தம் 11 பணிகள் நடைபெற்று வருகிறது.

சீர்மிகு நகரத்திட்டத்தின்கீழ் திறந்துவைக்கப்பட்ட திட்டப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சேலம் மாவட்ட அரசு விழாவில் மாநகராட்சிக்கு பல்வேறு முடிவுற்றத் திட்டப்பணிகளைத் திறந்து வைத்தார்.

- ❖ ரூ.5.58 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சி அஸ்தம்பட்டி மண்டலம், கோட்டை பழைய மார்க்கெட் சாலையில் வணிக வளாகம்.
- ❖ ரூ.5.61 கோடி மதிப்பில், சூரமங்கலம் மண்டலத்திற்குட்பட்ட ஸ்ரீ கிருஷ்ணா ராஜேந்திரா சத்திரம் புனரமைப்பு பணி.
- ❖ ரூ.34 கோடி செலவில், தம்மண்ணன் ரோடு, லீபஜார் ரோடு, சீத்தாராமன் ரோடு ஆகிய மூன்று சீர்மிகு சாலைகள்.
- ❖ ரூ.4.41 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சி கோட்டை சின்னசாமி தெருவில் உள்விளையாட்டு அரங்கம் மற்றும் வாகன நிறுத்துமிடம்.

அறிவிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாநகராட்சியின் வளர்ச்சிக்காக தொகை ரூ.917 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களை அறிவித்தார்.

- ❖ ரூ.530 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகள்.
- ❖ ரூ.158 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் கூடுதல் குடிநீர் வழங்கும் பணிகள்.
- ❖ ரூ.69 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள போடிநாயக்கன்பட்டி ஏரி, அல்லிக்குட்டை ஏரி மற்றும் மூக்கனேரி நீர்நிலைகள் மேம்பாடு.
- ❖ ரூ.20 கோடி மதிப்பில், விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காக மாவட்ட விளையாட்டு பல்நோக்கு அரங்கம் .
- ❖ ரூ.20 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சிப் பகுதியில் உள்ள சாலைகளை மேம்படுத்துதல்.
- ❖ ரூ.120 கோடி செலவில், சேலம் மாநகராட்சி, அம்மாப்பேட்டை பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக இரயில்வே மேம்பாலம்.

பணிநியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சேலத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பணிக்காலத்தில் இயற்கை எய்திய அரசு பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

- ❖ சேலம் மாநகராட்சியில் கருணை அடிப்படையில் 226 பணியாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டு பயன்பெற்றுள்ளனர்.

சாலைப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையிலான அரசு சேலம் மாநகராட்சியில் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளான சாலைப் பணி, குடிநீர் பணி மற்றும் சுகாதாரப் பணிகளுக்காக பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்.

- ❖ ரூ.6.15 கோடி மதிப்பில், வடகிழக்குப் பருவமழையினால் பாதிப்புக்குள்ளான 65 சாலைகள் 28.32 கிலோ மீட்டர் நீளத்திற்கு தார் ஒட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டதோடு, சேதமடைந்த 15 குடிநீர் குழாய்கள் சீரமைப்பு.

- ரூ.5.81 கோடி மதிப்பில், இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி 2021–2022இன் கீழ், மாநகராட்சிப் பகுதிகளில் 150 கழிப்பிடங்கள் புதுப்பிப்பு.

- ரூ.3 கோடி மதிப்பில், மூலதன மானிய நிதி 2021–2022இன் கீழ், அஸ்தம்பட்டி மண்டலம், அழகாபுரம் பெரியபுதூர், அம்மாப்பேட்டை ஜோதி டாக்கீஸ் பகுதிகளில் 2 புதிய எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிகள்.

- 15ஆவது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2020–2021இன் கீழ், ரூ.10.26 கோடி மதிப்பில், செட்டிச்சாவடி திடக்கழிவு மேலாண்மை வளாகத்தில் சுற்றுசுவர் கட்டுதல், 63 புதிய (LCV) வாகனங்கள், 2 ரோபோடிக் வாகனம் உட்பட 23 பணிகள்.

- 15ஆவது மத்திய நிதிக்குழு மானிய நிதி 2021–2022இன் கீழ், ரூ.75.45 கோடி செலவில், நுண்ணுயிரி உரம் தயாரிக்கும் மையம், மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் அபிவிருத்திப் பணிகள் என 118 பணிகள்.

- சேலம் மாநகராட்சியில் நடைபெற்ற, மாபெரும் மழைநீர் வடிகால் தூர்வாருதல் பெருமுகாம் மூலம் 120 இடங்களில் 30 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஓடைகள், மழைநீர் கால்வாய்கள், ஏரிகள் தூர்வாரி சீரமைப்பு.

- சேலம் மாநகராட்சிக்கு சொந்தமான 2,137 ஏக்கர் பரப்பிலான பனமரத்துப்பட்டி ஏரி மறுசீரமைப்பு செய்யும் முதற்கட்டப்பணி.

சுகாதாரப்பிரிவு

- சேலம் மாநகராட்சிப் பகுதியில் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின்கீழ், 2,34,111 நபர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு, நோய் கண்டறியப்பட்டவர்களின் வீடு தேடிச் சென்று மருந்து மாத்திரைகள், மருத்துவ சிகிச்சைகள் வழங்கி 33,997 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

- சேலம் மாநகராட்சியில், கொரோனா நோய் தொற்று தடுப்பு முதல் தவணையாக 6,13,734 நபர்களுக்கும், இரண்டாம் தவணையாக 4,99,876 நபர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டு 92 சதவீதம் இலக்கு எய்தப்பட்டுள்ளது.

- ரூ.44 இலட்சம் மதிப்பில், சேலம் மாநகராட்சியில் 2 ஒருங்கிணைந்த மாநகரப் பொது சுகாதார ஆய்வகங்கள்.

- ரூ.8 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சியில் 32 நகர்ப்புற நலவாழ்வு மையங்களுக்கு கட்டடங்கள் கட்டும் பணிகள்.

- ரூ.2 கோடி மதிப்பில், சேலம் மாநகராட்சியில் ஏற்கெனவே உள்ள 3 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கூடுதல் கட்டடங்கள் மற்றும் 1 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தும் பணிகள்.

- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தின்கீழ், 7,475 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ரூ.2.99 கோடி உதவித்தொகை.

- சேலம் மாநகராட்சியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தில் 4 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு அதிநவீன மருத்துவ ஆலோசனை மற்றும் மருத்துவ சிகிச்சை 10,246 நபர்களுக்கு அளிக்கப்பட்டு பயனடைந்துள்ளனர்.

- சேலம் மாநகராட்சிப் பகுதியில், நகருக்குள் வனம் அமைக்கும் திட்டத்தின்கீழ், 56 இடங்களில் 75 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

கொரோனா நோய்தொற்று விழிப்புணர்வு தடுப்புப் பணிகள்

- கொரோனா நோய்தொற்றை வீடு வீடாக சென்று கண்டறியும் பணிக்காக 1,538 களப்பணியாளர்கள், 5 மருத்துவர்கள் மற்றும் 14 செவிலியர்கள் நியமினம்.

- கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 998 படுக்கை வசதிகளுடன், 6 தற்காலிக சிகிச்சை மையங்கள் மூலம் சிகிச்சை.

- சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளித்திட 220 படுக்கை வசதிகளுடன், 1 தற்காலிக சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு சிகிச்சை.

- 21,742 சளி தடவல் பரிசோதனை (RTPCR) சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு 7,00,145 நபர்களுக்கு சளி தடவல் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, நோய் எதிர்ப்பு சக்திக்கான மாத்திரைகள் வழங்கப்பட்டது.

- சேலம் மாநகராட்சியில் 18 வயதிற்கு மேற்பட்ட 5,88,844 நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது.

- சேலம் மாநகராட்சியில் 15 வயது முதல் 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு முதல் தவணையாக 34,003 நபர்களுக்கும் இரண்டாவது தவணையாக 25,452 நபர்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கான தடுப்பூசி

- ❖ முதல் தவணையாக 745 மாற்றுத்திறனாளிகளுக்கும், இரண்டாவது தவணையாக 462 மாற்றுத்திறனாளிகளுக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

முன்னெச்சரிக்கை தவணை தடுப்பூசி திட்டம்

- ❖ கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுத்திடும் பொருட்டு, 712 சுகாதார பணியாளர்கள், 738 முன்களப்பணியாளர்கள், 60 வயதிற்கு மேற்பட்ட 8,688 இணை நோய் உள்ளவர்கள் என மொத்தம் 12,308 நபர்களுக்கு முன்னெச்சரிக்கை தவணை கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

முன்களப் பணியாளர்களுக்கு நிதியுதவிகள்

- கொரோனா நோய் தடுப்புப் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த ஒரு தற்காலிக செவிலியர், ஒரு செயல்திறன் உதவியாளர், 4 தூய்மைப்பணியாளர்கள், 5 இதரப்பணியாளர்கள் ஆகியோர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவித்தொகையாக ரூ.2.30 கோடி வழங்கப்பட்டது.

நகரமைப்புத் திட்டப்பிரிவு

- சேலம் மாநகராட்சியில், ரூ.329.69 இலட்சம் கட்டணம் பெறப்பட்டு 945 கட்டடங்கள் கட்டிட அனுமதி.

- சேலம் மாநகராட்சியில், வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணமாக ரூ.583.33 இலட்சம் பெறப்பட்டு 382 மனைகள் வரன்முறை.

❖ ❖ ❖

23.12.2021 அன்று சேலம் மாநகராட்சி மைய அலுவலக கட்டடத்தில்
தமிழ் வாழ்க, சேலம் மாநகராட்சி என எழுதப்பட்ட பெயர் பலகையை
மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் திரு. **கே.என்.நேரு** அவர்கள் திறந்துவைத்தார்.